**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 2, Issue - 2, May 2023** **E-ISSN: 2583-0481**

# Twinfold Perceptive of *Manimegalai*

**Dr. S. Gurugnanambiga,** Assistant Professor of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore- 43, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0009-0277-1697**
**DOI: 10.5281/zenodo.7981537**
**Received** 13 March 2023; **Revised form** 11 April 2023; **Accepted** 25 April 2023; **Available online** 26 May 2023.

## Abstract

*Humanity has been prioritized right from Sangam literature to today's Tamil literature. "Manimegalai", one of the five great epic poems, underpins Buddhism and emphasizes education, asceticism, courage, utility, this life, the afterlife, government, and people, but it emphasizes humanity the most. "Manimegalai" is created with simplicity and aesthetics. It explains the love of other lives, alleviation of hunger, highlighting impermanence and maintaining public welfare without selfishness. Although the purpose of the book is to highlight Buddhist religious concepts, the core material of the book highlights humanity, compassion for life, maintenance of common welfare and religious commonality through the character of Manimegalai. The character Manimegalai describes the effort to overcome the narrow-mindedness of human life and to reach the vast and limitless human being. The psychological background of the character Manimegalai travels beyond the home and into the social space is set in the period when women had few opportunities to come out and engage in public charity. It can be seen that "Manimegalai" is an epic that teaches the principles of Buddhism and aims at the well-being of human society.*

**Keywords:** Theory of Karma, Birth and Karma, Belief in Reincarnation, Karmic Effect, Impermanence of Time.

## References

[1] Raamasubramaniam. Va. Tha. (U.Aa). *Manimegalai Moolamum Uraiyum*. Poombugar Pathippagam, Chennai – 600108.
[2] Chidhambaranar. Saami. *Manimegalai Kaatum Manitha Vaazhvu*. Sri Senbaga Pathippagam, Pudhiya Yen. 32. B, Krishna Theru, Pandi Bazar, Chennai – 600017.
[3] Puliyur Kesigan. *Manimegalai Moolamum Thelivuraiyum*. Saradha Pathippagam, Sri Krishnapuram Theru, Rayapettai, Chennai – 600014.
[4] Nannan Ma. Pulavar. *Manimegalai*. Ezhini Pathippagam, 15. A, Kaasa Mejar Road, Ezhumbur, Chennai – 600008.
[5] Venkatasaamy Nattar. Na. Mu. Navalar Dhuraisaamy Pillai. Avvai. *Uraivendhar – Imberunkaappiyangal Pagudhi 2 - Manimegalai*. Amizhtham Pathippagam, Thiyagarayar Nagar, Chennai – 600017.
[6] Aarurdhas. Kalaiviththagar (U.A). *Thirukkural Moolamum Uraiyum*. Sri Ishwarya Pathippagam, Aaranippalaiyam, Aarani – 632301.
[7] Narayanaveluppillai. Viththuvan. *Panniru Thirumuraigal*. Narmadha Pathippagam, Thiyagarayar Nagar, Chennai – 600017.

[8] Rajaram. Durai. *Thirumoolar Vaazhvum Vaakkum*. Narmadha Pathippagam, Thiyagarayar Nagar, Chennai – 600017.

[9] Narayanaveluppillai. Viththuvan. *Sanga Ilakkiyam Vaazhangum Pathinen Keezhkanakku Noolgal*. Narmadha Pathippagam, Thiyagarayar Nagar, Chennai – 600017.

[10] Rajaram. Durai. *Pathinen Keezhkkanakku Pagudhi* – 3. Mullai Pathippagam, T-Nagar, Chennai - 600017. Mudhal Pathippu – 1995.

[11] NarayanaVeluppillai. *Viththuvaan – Thirumoolar Arulicheidha Thirumandhiram (Paththaam Thirumurai), (Moolamum Thelivuraiyum*). Varthamanan Pathippagam, Thiyagarayar Nagar, Chennai – 600017. Mudhal Pathippu – 1995

[12] Balasundharampillai. Thi. Su. (U.Aa) - *Pathinen Keezhkanakku Noolgalil Ondragiya Naladiyar*. Kalaga Veliyeedu, Thennindhiya Saiva Siththandha Noorpathippukalagam, TT Road, Chennai – 600018.

[13] Parimelazhagar Urai (U.Aa). *Thirukkural*. Saradha pathippagam, Sri Krishnapuram Theru, Rayapettai, Chennai – 600014, Mudhal Pathippu – 2002.

[14] Saloman Pappaiya. Pe. Ra. *Thirukkural Uraiyudan*. Kavitha Pathippagam, T-Nagar, Chennai - 600017. Mudhal Pathippu – 2006.

[15] Gurusaamy Munaivar. *Nachinarkiniyar Uraineri*. Raani Pathippagam, Govindhan Theru, Chennai 600029, Mudhal Pathippu – 2008.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 2, இதழ் - 2, வைகாசி 2054 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# *மணிமேகலை* உணர்த்தும் இருதிறக் கோட்பாடுகள்

**முனைவர் ச. குருஞானாம்பிகா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர் - 43, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0009-0277-1697**
**DOI: 10.5281/zenodo.7981537**

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க இலக்கியம் தொட்டு இன்றைய இலக்கியம் வரை மனிதநேயமே பெரும்பான்மையும் முதன்மைப்படுத்தப்படுகிறது. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை பௌத்த சமயத்தை அடியொற்றி கல்வி, துறவு, துணிவு, வினைப்பயன், இம்மை, மறுமை, அரசு, மக்கள் என அனைத்தையும் எடுத்துரைத்தாலும், மனித நேயத்திற்கே முக்கியத்துவம் அளிக்கிறது. காப்பியங்களில் சமுதாய மறுமலர்ச்சியும், சமயப் பின்னணியும், எளிமையும் அழகும் கொண்டு படைக்கப் பெற்ற பெருங்காப்பியம் மணிமேகலை ஆகும.; பிறர் உயிர்களை நேசித்தல், பசிப்பிணிப் போக்குதல், நிலையாமையை எடுத்துரைத்து சுயநலம் தவிர்த்துப் பொது நலம் பேணல் ஆகியவற்றை விளக்குகிறது. பௌத்த சமயக் கருத்துக்களை எடுத்துரைப்பது காப்பியத்தின் நோக்கமாக இருந்தாலும், மணிமேகலை என்கிற பாத்திரத்தின் வழியாக மனித நேயத்தை, உயிர் இரக்கத்தை, பொதுநலம் பேணுதலை, சமயப் பொதுமையை காப்பியப் பொருள் எடுத்துரைக்கிறது. குறுகிய மனித வாழ்வைக் கடந்து, பரந்து பட்ட எல்லை இல்லாத மனிதத்தை தேடிச் சென்று அடைகிற முயற்சியை மணிமேகலை எனும் பாத்திரம் விளக்குகிறது. பெண்கள் வெளியே வந்து, பொதுத் தொண்டில் ஈடுபட வாய்ப்புகள் அரிதாக இருந்த அந்த காலகட்டத்திலேயே மணிமேகலை வீடு தாண்டி, சமூகவெளியில் பயணிப்பதை உளவியல் பின்னணியில் அமைந்திருக்கிறது. "மணிமேகலை" புத்தமதக் கொள்கைகளைப் போதிக்கும் நூல் ஆயினும் மனித சமுதாயத்தின் நல்வாழ்வைக் குறியாகக் கொண்ட நூலாகவும் உள்ளது என்பதை அறிய முடிகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** வினைக் கோட்பாடு, பிறப்பும் வினையும், மறுபிறப்பில் நம்பிக்கை, வினைப்பயன், சமயங்களில் நிலையாமை.

**முன்னுரை**

இன்பமும், துன்பமும் நிறைந்தது மனித வாழ்க்கை. ஒருவருடைய பெருமை அல்லது தகுதிப்பாடு என்பது இக்கட்டான சூழ்நிலைகளில் அவன் நடந்து கொள்ளுகிற விதத்திலேயே அமைந்திருக்கின்றது. அந்த மதிப்பீடு தான் வாழ்க்கை நெறிகளில் ஒன்றாக அமைந்து, வழிவழித் தலைமுறையினருக்கும் சீரிய முறையில் வழிகாட்டியாகத் திகழ்கிறது. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை பௌத்த சமயத்தை அடியொற்றி கல்வி,

துறவு, துணிவு, வினைப்பயன், இம்மை, மறுமை, அரசு, மக்கள் என அனைத்தையும் எடுத்துரைக்கின்றது. பிறர் உயிர்களை நேசித்தல், இரங்குதல், அவற்றின் துயர்களைதல், பசிப்பிணிப் போக்குதல், அறத்தினை எடுத்துரைத்தல், நிலையாமையை எடுத்துரைத்து சுயநலம் தவிர்த்துப் பொது நலம் பேணல் ஆகியவற்றை விளக்குகிறது. மணிமேகலையின் வழியாக வினைப்பயன், நிலையாமைக் கோட்பாடுகளை விளக்குவதே இக்கட்டுரைப் பொருளாக அமைகிறது.

**வினைக் கோட்பாடு**

**வினை**

வினை என்பது பொதுவாக செயலைக் குறிக்கும். நாம் செய்யும ஒவ்வொரு செயலுக்கும் அதற்கானப் பலன் கிடைக்கும். நாம் செய்யும் செயலாலேயே நமது வினைப் பயன் நிர்ணயம் செய்யப்படுகிறது. வினை என்பது நம் பிறவியுடன் பொருந்தி வருவதாகும்.

**வினையின் வகைகள்**

வினை என்பது இரண்டு வகைகளாய் பகுக்கப்பட்டுள்ளது. அவை,

- **நல்வினை**
- **தீவினை**

என்பனவாகும்.

***தீவினை***

தீவினை என்பது தீயசெயல்கள் மூலமும் தீய எண்ணங்கள் மூலமும் தோன்றும் வினைப்பயனாகும். உடலில் தோன்றுவது, சொல்லில் தோன்றுவது, உள்ளத்தில் தோன்றுவது எனத் தீவினை மூன்று வகைகள் ஆகும்.

- **கொலை**
- **களவு**
- **காமம்**

ஆகிய தீய விருப்பம் மூன்றும் உடலிலே தோன்றுவனவாகும்.

- **பொய்**
- **புறங்கூறல்**
- **கடுஞ்சொல்**
- **பயனற்ற சொல்**

என்று நால்வகைக் குற்றங்கள் சொல்லிலே தோன்றுவனவாகும்.

- **விரும்புதல்**
- **வெகுளுதல்**
- **மயக்கம்**

இம்மூன்றும் உள்ளத்தில் தோன்றுவனவாகும். இந்த வகைகளில் தீவினை தோன்றும். இந்தத் தீவினையின் தன்மையை உணர்ந்தவர்கள் தீயவற்றில் மனத்தைச் செலுத்த மாட்டார்கள். இருந்தும் தீயவற்றில் மனத்தைச் செலுத்துவதனால் விலங்கு, பேய், நரகர் என்ற பிறப்புகளை எடுத்துப் பிறவிதோறும் துன்புறுவர். இதனை,

**தீவினை யென்பது யாது? ஏன வினவின்,**
**ஆய்தொடி நல்லாய்! ஆங்கது கேளாய்**
**கொலையே களவே தாமத் தீவிழைவு**
**உலையா உடம்பில் தோன்றுவ மூன்றும்**
**பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்**
**சொல்லெனச் சொல்லில் தொந்றுவ நான்கும்**
**வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்று**
**உள்ளந் தன்னின் உருப்பன மூன்றும் - எனப்**
**பத்து வகையால் பயன்தெரி புலவர் (*மணிமேகலை*, கா. 24)**

என்ற பாடல் அடிகளில் வாயிலாக அறியலாம்.

**நல்வினை**

நல்வினை என்பது தீவினையாகக் கருதப்படும் பத்துக் குற்றங்களில் இருந்தும் நீங்கி, ஒழுக்கத்தைப் பின்பற்றி, தானம் செய்து ஆகும். அவ்வாறு வாழ்பவர்கள் தேவர்; மக்கள், பிரமர் ஆகிய பிறவியெடுத்து நல்வினையின் பயனை அடைவர். இதனை,

**நல்வினை யென்பது யாது? ஏன வினவின்**
**சொல்லிய பத்தின் தொகுதியின் நீங்கிச்**
**சீலம் தாங்கித் தானம் தலைநின்று**
**மேலேன வகுத்த ஒருமூன்று திறத்துத்**
**தேவரும் மக்களும் பிரமரு மாகி,**
**மேவிய மகிழ்ச்சி வினைப்பயன் உண்குவர் (*மணிமேகலை*, கா. 24)**

என்ற பாடலின் மூலம் அறியமுடிகிறது.

**பிறப்பும் வினையும்**

உலகம் மேல், கீழ், நடு என மூன்றாகும். உயிர்கள் ஆறு வகையென பௌத்த சமயம் கூறுகிறது. அவை மக்கள்,தேவர், பிரமர், நரகர், விலங்கு, பேய் என்பனவாகும். உயிர்கள் நல்வினை, தீவினை என்னும் இருவினைப் பயனால் தங்களுக்குரிய பிறவி எடுத்து, தம் வினைகள் பயனைத் தரும் காலத்தில் தாம் செய்த வினைக்கு ஏற்ப இன்பமும் துன்பமும் அடைகின்றன. இதனை,

**உலகம் மூன்றினும் உயிராம் உலகம்**
**அலகில் பல்லுயிர் அறுவகைத் தாகும்**

**மக்களும் தேவரும் பிரமரும் நரகரும்**
**தொக்க விலங்கும், பேயும் என்றே**
**நல்வினை தீவினை என்றிரு வகையாற்**
**சொல்லப் பட்ட கருவினுள் தோன்றி**
**சொல்லப் பட்ட கருவினுள் தோன்றி**
**வினைப்பயன் விளையுங் காலை உயிர்கட்கு**
**மனப்பே ரின்பமும் கவலையும் காட்டும் (*மணிமேகலை*, கா. 24)**

என்ற பாடலின் வழி அறியலாம்.

**மறுபிறப்பில் நம்பிக்கை**

ஒவ்வொருவரும் செய்த வினைகளுக்கு ஏற்ப உயிர்களுக்கு மறுபிறவி உண்டு என்ற கோட்பாட்டில் பௌத்த சமயத்திற்கு ஆழமான நம்பிக்கையுண்டு. மணிமேகலைக் காப்பியத்தில் உதயகுமரன், மணிமேகலை, மாதவி, சுதமதி ஆகிய பாத்திரங்களின் முற்பிறவி பற்றிய குறிப்புகள் இடம்பெறுகின்றன.

முற்பிறப்பில் மணிமேகலையின் தமக்கைகளாக இருந்தவர்கள் இப்பிறப்பில் மணிமேகலையின் தாய் மாதவியாகவும், தோழி சுதமதியாகவும் பிறந்துள்ளனர். இதனை,

**இன்னும் கே ளாய் இலக்கும்! நீ நின்**
**தவ்வையர் ஆவோர், தாரையும் வீரையும்**
**ஆங்கவர் தம்மை, அந்நாட் டகவயின்**
**கச்சயம் ஆளும் கழற்கால் வேந்தன்**
**துச்சயன் என்போன் ஒருவன் கொண்டனன்! (*மணிமேகலை*, கா. 10)**

என்ற பாடல் வழி அறியலாகிறது. மேலும், முற்பிறப்பில் இலக்குமியாக இருந்த பெண் மணிமேகலையாகப் பிறந்துள்ளாள். இலக்குமியின் கணவனாக இருந்த இராகுலன் இப்பிறவியில் மணிமேகலையைத் தொடர்ந்து செல்லும் உதயகுமரனாகப் பிறந்துள்ளான் என்பதனையும் மணிமேகலைக் குறிப்பிடுகிறது. முற்பிறவியில் இலக்குமியாக இருந்தவள் சாதுசக்கர முனிவர்க்கு உணவளித்ததால் இப்பிறவியில் தவச்செல்வியான மணிமேகலையாகப் பிறந்துள்ளாள். அத்துடன் அமுதசுரபி கொண்டு பசியால் தவிப்பவர்களின் பசிப்பிணியைப் போக்கும் அறச்செயலினைச் செய்பவளாகத் திகழ்கிறாள்.

**வினைப்பயனால் விளையும் நிகழ்ச்சிகள்**

நல்வினை, தீவினையின் பயனால் விளைந்த பல நிகழ்ச்சிகளை மணிமேகலை விளக்கமாகக் கூறிச் செல்கிறது.

மணிமேகலையைத் தன்வயப்படுத்த உதயகுமரன் மணிமேகலையைத் தொடர்ந்து வருகிறான். அவனிடமிருந்து தப்ப மணிமேகலை சோலைவனத்தில் உள்ள பளிக்கறையில் புகுந்து மறைந்து கொள்கிறாள். அப்போது புகார் நகரில் நடக்கும் இந்திர விழாவைக் காணும்

விருப்பத்தால் அந்நகரப் பெண்போலத் தன் வடிவத்தை மாற்றிக்கொண்டு மணிமேகலா தெய்வம் அங்கு வருகிறது. மணிமேகலையின் நல்வினை அதன் பயனைத் தரும் காலம் கனிந்ததால் மணிமேகலைக்கு உதயகுமரனால் தீங்கு ஏதும் நேராமலிருக்க மணிமேகலையை மணிமேகலா தெய்வம் மணிபல்லவத் தீவிற்கு எடுத்துச் செல்கிறது. இதனை,

**...பூங்கொடி தன்னைப் பொருந்தித் தழீஇ**
**அந்தரம் ஆறா, ஆறைந்து யோசனைத்**
**தென்திசை மருங்கில் சென்று, திரையுடுத்த**
**மணிபல் லவத்திடை, மணிமே கலாதெய்வம்**
**அணியிழை தன்னைவைத்து அகன்றது தான்என் (*மணிமேகலை*, கா. 8)**

என்ற பாடலின் வழி அறியலாம்.

**வினையின் பயனை அறவண அடிகள் உணர்த்தல்**

மணிமேகலை அறவண அடிகளைக் கண்டு வணங்கி மணிபல்லவத் தீவில் தன் முற்பிறப்பினை உணர்ந்ததும் அமுதசுரபி என்ற அற்புதப் பாத்திரத்தைப் பெற்ற செய்திகள் அனைத்தையும் கூறுகிறாள். அறவண அடிகளும் பாதபங்கய மலையில் புத்தரின் பாதங்களை வணங்கி, மாதவி, சுதமதி ஆகிய இருவரின் முற்பிறப்பை உணர்ந்ததை விளக்குகிறார். முற்பிறவியில் வீரையும் தாரையுமாக மாதவி, சுதமதி ஆகியோர் இருந்ததையும் யானையால் வீரை இறந்ததால் தாரை இறந்ததும் இவர்களின் இறப்பால் கணவன் துச்சயன் துயரமுற்றதையும் கூறுகிறார். அறவணஅடிகள் துச்சயனுக்கு ஆறுதல் கூறும்போது,'இது அவரவர் வினைப்பயனால் நேர்ந்தது' என்று கூறி அமைதிப்படுத்துகிறார். வினையின் பயனை அனுபவித்தே ஆகவேண்டுமென்பதும் அதற்காக வருந்தாமல் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதையுமன்றோ இந்நிகழ்ச்சி உணர்த்துகிறது. இதனைப் போலவே சில நிகழ்வுகளும் மணிமேகலையில் இடம் பெற்று உள்ளன.

**உதயகுமரன் வெட்டுண்டு இறத்தல்**

தன்னைப் பின்தொடரும் உதயகுமரனிடமிருந்து தப்ப மணிமேகலை விஞ்சை மங்கையாகிய காயசண்டிகை வடிவில் அமுதசுரபி ஏந்தி உணவு படைக்கிறாள். காயசண்டிகை விஞ்சையனான காஞ்சனன் மனைவி. முன்பு விருச்சிக முனிவர் இட்ட சாபத்தால் யானைப்பசி என்னும் நோய்க்கு ஆளானாள். யானைப்பசி நோய் என்பது எவ்வளவு உண்டாலும் பசி தீராமல் மேலும் மேலும் அதிகமாகும். இந்நோய் பன்னீராண்டுகள் துன்பத்தைத் தரும். மணிமேகலை அமுதசுரபியிலிருந்து அளித்த உணவை உண்டதும் காயசண்டிகையின் பசி தீர்ந்தது. அவள் தன் இருப்பிடம் திரும்பினாள். காயசண்டிகை சாபம் பெற்று யானைப்பசி நோயினால் வருந்திய காலமும் முடிவுந்ததால் அவள் திரும்பி வருவாள் என அவள் கணவனான காஞ்சனன் காத்துக்கொண்டு இருந்தான். அவள் வராமலிருக்கவே அதற்கு காரணம் என்னவாக இருக்கும் எனக் கவலையுற்றுக் காஞ்சனன் அவளைத் தேடிக் கொண்டு வருகிறான்.

காயசண்டிகை வடிவில் மணிமேகலை அமுதசுரபி கொண்டு உணவளிப்பதைப் பார்த்த காஞ்சனன் அவளைத் தன் மனைவியெனத் தவறாக நினைத்து அவளோடு பேசமுற்படுகிறான். காயசண்டிகை வடிவில் இருந்த மணிமேகலையோ அவனைப் பொருட்படுத்தாமல் அவளைத் தொடர்ந்து வந்த உதயகுமரனை சென்ளு நிலையாமையை அறிவுறுத்துகிறாள். தன் மனைவி அயலான் முன் சென்று பேசுகிறாள்; என்று கண்ட காஞ்சனன், அவன் மீது கொண்ட விருப்பத்தினால் தான் இவள் திரும்பி வரவில்லையென முடிவு செய்து, உதயகுமரனைத் தன் வாளால் வெட்டிக் கொன்று விடுகிறான். இதனை,

**ஆங்குமுன் இருந்த அலர்தார் விஞ்சையன்,**
**ஈங்கிவன் வந்தனன் இவள்பால் என்றே**
**வெஞ்சின அரவ நஞ்செயிறு அரும்பத்**
**தன்பெரு வெகுளியின் எழுந்துபை விரித்தென**
**இருந்தோன் எழுந்து, பெரும்பின் சென்றவன்**
**சுரும்பறை மணித்தோள் துணிய வீசிக் (*மணிமேகலை*, கா. 20)**

என்ற பாடலின் மூலம் அறியலாம். ஊழ்வினையின் பயனாலேயே உதயகுமரன் காஞ்சனனின் வாளால் வெட்டுண்டு இறந்தான் என உலகவறவியில் இருந்த கந்திற்பாவை என்னும் தெய்வம் காஞ்சனனுக்கு விளக்கியதோடு, காயசண்டிகை ஊர் திரும்பியதையும், மணிமேகலை காயசண்டிகை வடிவில் இருப்பதையும் கூறியது.

**அரசிக்கு மணிமேகலையின் அறவுரை**

உதயகுமரனின் இறப்புக்கு மணிமேகலையே காரணம் என்றெண்ணி அரசி கொடுமைகள் பலவற்றை மணிமேகலைக்குச் செய்கிறாள். மணிமேகலா தெய்வத்திடம் தான் பெற்ற மந்திர மொழிகள் மூலம் அவற்றையெல்லாம் மணிமேகலை தாங்கிக் கொண்டு எந்தவிதப் பாதிப்பிற்கும் ஆளாகாமல் இருக்கிறாள். மணிமேகலையின் இந்நிலையைக் கண்டு அரசி மிகவும் வியப்படைவதோடு தன் செயலுக்காக வருந்தவும் செய்கிறாள். இராசமாதேவியின் மனம் மாறுகிறது. மனம் திருந்தி மணிமேகலையை வணங்குகிறாள். இதனை,

**ஐயென விம்மி, ஆயிழை நடுங்கிச்**
**செய்தவத் தாட்டியைச் சிறுமை செய்தேன்**
**என்மகற் குற்ற இடுக்கண் பொறாது**
**பொன்னே ரனையாய்! பொறுக்க என் றவள்தொழ (*மணிமேகலை*, கா. 23)**

என்ற பாடலின் வழி இதனை உணர முடிகின்றது. மணிமேகலை இராசமாதேவிக்குத் தன் முற்பிறப்பைப் பற்றி கூறி, தன் கணவனாக இருந்த இராகுலனைப் பற்றியும் முற்பிறவியில் இராகுலன் தாயாக அரசமாதேவி இருந்ததையும் கூறுகிறாள். உதயகுமரனை இழந்ததற்காக அழும் அரசமாதேவி சுட்டிக்காட்டி, வினையின் பயனை யாராக இருந்தாலும் அனுபவித்தே

ஆக வேண்டுமென்பதை எடுத்துக்காட்டி இனியாவது நல்வினைகளைச் செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்துகிறாள். ‘பூங்கொடி போன்ற தேவி, நீ எதற்காக அழுதாய்? நின் மகனின் உடலுக்காக அழுதாயா? உயிருக்காக அழுதாயா? உடலுக்காக அழுதாயானால் உன் மகனது உடம்பைப் புறங்காட்டில் யார் இட்டனர்? உயிர்க்காக அழுதாயானால் செய்வினை வழியே அவ்வுயிர் புகும். அது புகுமிடத்தை நம்மால் தெரிந்து கொள்ள இயலாது. அதனால் அந்த உயிரிடத்து அன்புடையையாயின், அஃது எவ்வுடலில் இருக்கும் என்பதை உணராத நிலையில் எல்லா உயிர்களிடத்தும் நீ இரக்கம் கொள்ளல் வேண்டும்’ என்கிறாள். உயிர்கள் அனைத்தின் இடத்திலும் அன்பு பாராட்ட வேண்டும் என்ற நேயத்தைச் சாத்தனார் இங்கு வலியுறுத்துகிறார். இதனை,

**…உயிர்க்கு அழுதனையேல் உயிர்புகும் புக்கில்**
**செயப்பாட்டு வினையால் தெரிந்து உணர்வு அரியது**
**அவ்வுயிர்க்கு அன்பினை ஆயின் ஆய்தொடி**
**எவ்வுயிர்க்கு ஆயினும் இரங்கல் வேண்டும் (*மணிமேகலை*, கா. 23)**

என்ற பாடலின் வழி அறியலாகிறது.

**வினைப் பயன்களைப் பற்றி நீதிவெண்பாவில்,**

**தானே புரிவினையாற் சாரு மிருபயனுந்**
**தானே யனுபவத்தல் தப்பாது--- தானூறு**
**கோடி கற்பஞ் சென்றாலுங் கோதையே செய்வினை**
**நாடிநிற்கு மென்றார் நயத்து (நீதிவெண்பா, பா. 47)**

என்ற பாடல் வழி விளக்குகிறது

**தாந்தாமுன் செய்தவினை தாமே அனுபவிப்பார்**
**பூந்தாமரையோன் பொறிவழியே – வேந்தே**
**ஒறுத்தாரை என்செயலாம் ஊரெல்லாம்**
**வெறுத்தாலும் போமோ விதி (நல்வழி, பா. 60)**

என்ற நல்வழி பாடலிலும் வினைப் பயன்கள் பற்றி கூறியுள்ளனர். இதனைப் போலவே,

**பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று**
**வல்லதாம் தாய்நாடிக் கோடலைத் தொல்லைப்**
**பழவினையும் அன்ன தகைத்தே தற்செய்த**
**கிழவனை நாடிக் கொளற்கு. (நாலடியார், பா.101)**

என்ற நாலாடியார் பாடலிலும் வினைப் பற்றிய கருத்தினைக் கூறியுள்ளார்.

**நிலையாமைக் கோட்பாடு**

**நிலையாமை**

நிலையாமை என்பது உலக வாழ்வு நிலையில்லாதது என்பதனைக் குறிப்பிடுவதாகும்.

**பாங்கருஞ் சிறப்பின் பல்லாற்றானும்**

**நில்லா உலகம் புல்லிய நெறித்தே (தொல்.காஞ்சி., பா. 23)**

என்ற தொல்காப்பிய நூற்பா வழி நிலையாமையைப் பற்றி அறியலாம்.

வள்ளுவரோ நிலையாமையைப் பற்றி தனி அகராதியிலேயே குறிப்பிட்டுள்ளார்.

**நில்லாத வற்றை நிலையின் என்றுணரும்**

**புல்லறி வாண்மை கடை (குறள். 331)**

என்ற குறளடி வெண்பா மூலமும் நிலையாமையை அறிய முடிகிறது.

**நிலையானை வகைகள்**

நிலையானை என்பது நான்கு வகைகளாகப் பகுக்கப்படும். அவை உயிர் நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை ஆகியனவாகும்.

**சமயங்களில் நிலையாமை**

சைவம், வைணவம், சமணம், பௌதம் போன்ற சமயங்கள் அனைத்துமே நிலையாமைக் கோட்பாட்டில் நம்பிக்கை உடையன. அதிலும் சமணமும் பௌத்தமும் நிலையாமையை வற்புறுத்திக் கூறும் தன்மை உடையன. சாத்தனார் பௌத்த சமய அறங்களை வலியுறுத்தும் போதெல்லாம் நிலையாமையை அழுத்தமாகக் கூறுகிறார்.

**உதயகுமாரனுக்கு நிலையாமையை உணர்த்தல்**

பளிக்கறை புக்க காதையில் மணிமேகலையைத் தொடர்ந்து உதயகுமரன் வர, மணிமேகலை பளிக்கறைக்குள் மறைந்து கொள்கிறாள். உதயகுமரன் மணிமேகலையைத் தொல்லைப் செய்வான் என்பதை உணர்ந்த மணிமேகலையின் தோழி சுதமதி, அவனுக்கு யாக்கை நிலையாமையை விளக்குகிறாள்.

**வினைவிளங்கு தடக்கை விறலோய் கேட்டி**

**வினையின் வந்தது வினைக்கு விளைவாயது**

**…உரைத்த இசைபடு தீஞ்சொல்**

**சென்றவன் உள்ளம் சேரா முன்னர்ப்**

**பளிங்குபுறத் தறிந்த பவளப் பாவையின்**

**இளங்கொடி தோன்றுமால் இளங்கோ முன்என் (*மணிமேகலை*, கா. 4)**

உடம்பு வினையால் ஆனது. வினைக்கு விளைநிலமாக உடம்பு உள்ளது. புனையப்படுவனவாகிய மணப்பொருள்கள் நீக்கப்படுமானால் புலால் நாற்றத்தை வெளிக்காட்டுவதாகும். முதுமையடைந்தால் சாவினை உடையது உடையது. கொடிய நோய்க்கு இருப்பிடமாக திகழ்வது இந்த உடம்பு. பற்றுகளுக்குப் பற்றும் இடமாக உள்ளது. குற்றங்களுக்குக் கொள்கலமாய் உள்ளது. பாம்பு அடங்கும் புற்றைப் போல, கோபம் தங்குமிடமாக இருக்கிறது. மக்கள் யாக்கை இத்தகையது என விளக்கி, மணிமேகலையைப்

பின்தொடரும் செயலை அவன் விலக்கிக் கொள்ள வேண்டுமென்று மறைமுகமாகக் கூறுகிறாள்.

**சக்கரவாளக் கோட்டம் உணர்த்தும் உண்மை**

மணிமேகலா தெய்வம் மணிமேகலையின் தோழி சுதமதியிடம் சக்கரவாளக் கோட்டத்தின் தன்மையை விளக்கும்போது நிலையாமைக் கோட்பாடு அழுத்தம் பெறுகிறது. சுடுகாட்டில் தவநெறியில் செல்லும் துறவிகள், பெருஞ்செல்வர், மகவு பெற்ற இளமையான மகளிர், அறம் அறியாத இளம் சிறுவர், முதியோர், இளையோர் ஆகியோரை வேறுபாடின்றிக் கொடுந்தொழிலை உடைய எமன் கொன்று குவிப்பதைக் கண்டும் நிலையாமையை உணரவில்லை மக்கள். இறப்பு உண்மை என்று தெரிந்த பின்னரும் அறநெறியில் செல்லாதவர்களை எண்ணி அத்தெய்வம் வருந்துகிறது. இதனை,

**மிக்க நல்லறம் விரும்பாது, வாழும்**
**மக்களிற் சிறந்த மடவோர் உண்டோ? (*மணிமேகலை*, கா. 6)**

என்ற பாடல் வழி அறியலாம்.

**யாக்கை நிலையாமை**

மாதவியின் தாய் சித்ராபதியின் தூண்டுதலால் உதயகுமரன்; காதல் மிகுதியால் மணிமேகலையைக் காண அம்பலம் செல்கின்றான். மணிமேகலையைக் கண்டு,'நங்கையே! நீ நற்றவம் மேற்கொண்டதற்குரிய காரணம் தான் யாதோ?' என்று துணிந்து கேட்கிறான். அதற்கு அவள் பிறத்தலும் முதுமை அடைதலும் நோயுற்று வருந்துதலும் பின் இறத்தலும் உடையது இவ்வுடல். மேலும் இது துன்பங்களுக்கு ஒரு கொள்கலமாகவும் உள்ளது. மனித உடம்பின் நிலையாமையை மணிமேகலை உதயகுமாரனுக்கு உணர்த்தித் தன்னைப் பின்தொடர வேண்டாமென அறிவுரை கூறுகிறாள். அத்துடன் யாக்கையின் இத்தன்மையை நன்கு உணர்ந்ததால்தான் நல்ல தவத்தை மேற்கொண்டதாகக் கூறுகிறாள். மேலும் மணிமேகலை நரைமிக்க ஒரு மூதாட்டியைக் காண்பித்து, உதயகுமரனுக்கு இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை ஆகியவற்றையும் அறிவுறுத்துகிறாள்.

**நிலைத்ததும் நிலையாததும்**

நிலையாமைப் பற்றிப் பல இடங்களில் பல பாத்திரங்கள் வழி விளக்கிச் செல்லும் சாத்தனார் நிலைத்து நிற்பது எதுவென்றும் கூறுகிறார். இதனை,

**...இப்பிறப் பாயின்யான் நின்னடி இடையேன்**
**ஆப்பிறப்பு யான்நின் அடித்தொழில் கேட்குவன்**
**இளமையும் நில்லா யாக்கையும் நில்லா**
**வளவிய வான்பெரும் செல்வமும் நில்லா**
**புத்தே ளுலகம் புதல்வரும் தாரார்**
**மிக்க அறமே விழுத்துணை யாவது,**

**தானஞ் செய் எனத்--- தரும தத்தனும்**
**மாமன் மகள்பால் வான்பொருள் காட்டி**
**ஆங்கவன் அவளுடன் செய்த நல்லறம்**
**ஓங்கிரு வானத்து மீனினும் பலவால் (*மணிமேகலை*, கா. 22)**

என்ற பாடலின் வாயிலாக அறியலாம். நிலையாமைப் பற்றி,

**ஒன்றியஈரெண் கலையும் உடனுற**
**நின்றது கண்டு நினைககிலர் நீசர்கள்**
**கன்றிய காலன் கருக்குழி வைத்தபின்**
**சென்றதில் வீழ்வர் திகைபொழ் யாரே (*திருமந்திரம்*, 185)**

என்ற பாடலில், "பதினாறு கலைகளை நிறைய பெற்ற சந்திரன் மறுநாளே தேய்ந்து போவதை பார்த்தும் நம் இளமை நிலையாமையை உணராமல் இருப்பவர்கள் அறிவில்லாதவர்கள். இவர்கள் மீது கோபம் கொண்டு எமன் மறுபிறவி அழிப்பான்." என்று இளமை நிலைளாமையை திருமந்திரத்தின் மூலம் திருமூலர் விளக்குகிறார்.

பிறப்பு உண்டு என்றாள் இறப்பும் உண்டு. ஒரு நாள் கழிந்தது என்றாள் வாழ்நாளிள் பகுதி குறைந்தது என்று அர்த்தம். ஏமன் ஒவ்வொரு நாளாக அளந்து மனிதனின் வாழ்நாளை உண்ணுகிறான். இதனை வள்ளுவர்,

**நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்**
**வாளது உணர்வார்ப் பெறின் (குறள். 334)**

என்ற பாடலின் வழி உயிர் நிலையாமையைக் கூறுகிறார்.

**மற்றறிவாம் நல்வினை யாம் இளையோம் என்னாது**
**கைத்துண்டாம் போழ்தே கரவாது அறம்செய்யின்**
**முற்றியிருந்த கனியொழியத் தீவளியால்**
**நற்காய் உதிர்தலும் உண்டு (*நாலடியார்*, 19)**

என்ற நாலடியார் பாடலில், "கடுமையான காற்று அடிக்கும் போது முதிர்ந்த பழங்கள் விழுகின்றன. பிஞ்சுகளும் விழுந்து விடுகின்றன. எமன் முதியவர்களை மட்டுமின்றி இளைஞர்களையும் எடுத்துக்கொள்கிறது. அதனால் நாம் இளமை பருவத்திலேயே அறம் செய்ய வேண்டும்" என்று உயிரின் நிலையாமையைப் பற்றி அறியமுடிகிறது.

**முடிவுரை**

வாழ்க்கை இலக்கியங்களுக்கெல்லாம் அடிப்படை இலக்கணமாகவும், அவைகளில் ஒவ்வொன்றுக்கும் உறுதுணை ஊட்டமாகவும் மனிதநேயத்தையே எடுத்துக் கையாண்டிருக்கிறார்கள் சங்கத் தமிழர்கள். பழங்கால வாழ்க்கை முறையில் இருந்து நாகரிகமான மனித சமுதாய வாழ்வை நோக்கி நடைப்போடத் தொடங்கிய நாளில் இருந்து மனிதர்கள் வாழ்வுக்கு அடிப்படையாக மனிதநேயத்தை வளர்த்துக் கொண்டிருந்தார்கள். அது

வலுப்பெற்று, வளர்ந்து மனிதகுலத்திற்கு பயன்பட்டதை மணிமேகலைக் காப்பியம் தெளிவுற எடுத்துரைக்கிறது. நாம் செய்யும் செயலாலேயே நமது வினைப் பயன் நிர்ணயம் செய்யப்படுகிறது. வினை என்பது நம் பிறவியுடன் பொருந்தி வருவது என்பதையும், மூவகை நிலையாமையையும் மணிமேகலையின் வாயிலாக நன்றாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**குறிப்புகள்**

[1] இராமசுப்பிரமணியம். வ.த. (உ.ஆ). *மணிமேகலை மூலமும் உரையும்.* பூம்புகார் பதிப்பகம், சென்னை – 600 108.

[2] சிதம்பரனார். சாமி. *மணிமேகலை காட்டும் மனித வாழ்வு.* ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை – 600 017.

[3] புலியூர் கேசின். *மணிமேலை மூலமும் தெளிவுரையும்.* சாரதா பதிப்பகம், சென்னை-600014.

[4] நன்னன். மா. புலவர். *மணிமேகலை.* எழிலினி பதிப்பகம், சென்னை – 600 008.

[5] வேங்கடசாமி நாட்டர். ந.மு. நாவலர் துரைசாமிப்பிள்ளை. ஔவை. உரைவேந்தர். *ஐம்பெருங்காப்பியங்கள் பகுதி 2 – மணிமேகலை.* அமிழ்தம் பதிப்பகம், சென்னை – 600 017, மு.ப: 2009.

[6] ஆரூர்தாஸ். கலைவித்தகர் (உ.ஆ). *திருக்குறள் மூலமும் உரையும்.* ஸ்ரீஐஸ்வர்யா பதிப்பகம், ஆரணி – 632301.

[7] நாராயணவேலுப்பிள்ளை. வித்துவான். *பன்னிரு திருமுறைகள்.* நர்மதா பதிப்பகம், சென்னை – 600 017.

[8] இராசாராம். துரை. *திருமூலர் வாழ்வும் வாக்கும்.* நர்மதா பதிப்பகம், சென்னை – 600 017.

[9] நாராயணவேலுப்பிள்ளை. வித்துவான். *சங்க இலக்கியம் வழங்கும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்.* நர்மதா பதிப்பகம், சென்னை – 600 017.

[10] இராசாராம். துரை. வித்துவான். *பதினெண்கீழ்க்கணக்கு பகுதி – 3.* முல்லை பதிப்பகம், சென்னை – 600 017, மு.ப : 1995.

[11] நாராயணவேலுப்பிள்ளை. வித்துவான். *திருமூலர் அருளிச்செய்த திருமந்திரம் (பத்தாம் திருமுறை), (மூலமும் தெளிவுரையும்).* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை – 600 017. மு.ப: 1995.

[12] பாலசுந்திரம்பிள்ளை. தி.சு. (உ.ஆ). *பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய நாலடியார்.* கழக வெளியீடு, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம் லிமிடெட், சென்னை – 600 018.

[13] பரிமேலழகர் உரை (உ.ஆ). *திருக்குறள்.* சாரதா பதிப்பகம், சென்னை – 600 014. மு.ப: 2002.

[14] சாலமன் பாப்பையா. பேராசிரியர். *திருக்குறள் உரையுடன்.* கவிதா பதிப்பகம், சென்னை – 600 017, மு.ப: 2006.

[15] ச.குருசாமி முனைவர். *நச்சினார்க்கினியர் உரைநெறி.* இராணி பதிப்பகம், சென்னை – 600 029, மு.ப: 2008.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.